

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2025) கொளத்தூர், பல்லவன் சாலை, டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றிச்செல்வன், ஜோசப் சாமுவேல், தாயகம் கவி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரி நரேந்திரன் மற்றும் திருமதி ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2025) கொளத்தூர், பல்லவன் சாலை, டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பின்னர், அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்து, அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு 11 முறை

# தனி அலுவலர் காலத்தை நீட்டித்த ஆட்சி அ.தி.மு.க. ஆட்சி!

## சட்டப்பேரவையில் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

சென்னை, ஜன. 13 - சட்டப்பேரவையில் தனி அலுவலர் நியமனம் குறித்து உறுப்பினர்கள் பேசியதற்கு பதிலளித்த அமைச்சர் ஐ. பெரியசாமி பேசுகையில், 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு 11 முறை தனி அலவலர்கள் காலத்தை நீட்டித்த ஆட்சி அ.தி.மு.க. ஆட்சி என்று குறிப்பிட்டார்.



இது குறித்து பேரவையில் அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

இந்தியத் திருநாட்டில் முதல்வர் களுக்கெல்லாம் முதல்வராக இருக்கக்கூடிய தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சியை வழங்கிக்கொண்டி ருக்கின்ற நம்முடைய முதல்வர், தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு இடமாக, தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு எப்பொழுதும் தயாராக இருக்கிறது. உறுப்பினர் அன்பழகன் அவர்கள், உள்ளாட்சித் தேர்தல் நடத்தாமல் தனி அலுவலர்களின் கால நீட்டிப்பு செய்திருப்பதாக இங்கு சொன்னார்கள். இல்லை, உயர்ந்த நோக்கத்தோடு, குறிப்பாகச் சொல்கிறேன், 4 மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 46 ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. அந்த 46 ஊராட்சிகளும் அந்த 4 மாநகராட்சி பகுதிகளுக்குள்ளேயே வருகின்றன.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், தூத்துக்குடியில் மாப்பிள்ளையூரணி என்ற ஒரு ஊராட்சி உள்ளது. அந்த மாப்பிள்ளையூரணி என்பது தூத்துக்குடிக்குள்ளேயே இருக்கிறது. நகராட்சியாக இருந்தது, தற்போது மாநகராட்சி ஆகிவிட்டது. அதில் உள்ள மக்கள்தொகையானது 40,000 ஆகும்.

திருவாரூர் நகராட்சிப் பகுதியை எடுத்துக்கெண்டால், ஊருக்கு நடுவிலேயே ஒரு ஊராட்சி இருக்கிறது. இதுபோன்று சிறு சிறு ஊராட்சிகள், நகரப் பகுதிகளில் இருக்கின்றன. மொத்தம் 12,525 ஊராட்சிகள் இருக்கின்றன. ஊராட்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, 100 நாள் வேலைக்காக நகரத்தில் சேர்க்கப்படுகின்றன என்று உறுப்பினர் அன்பழகன் அவர்கள் தெரிவித்த கருத்து தவறானது. ஏனெனில், 395 ஊராட்சிகள் தற்போது நகராட்சிகளாகவும், பேரூராட்சிகளாகவும், நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயரத்தப்படுகின்றன.

இதுபோன்று தரம் உயர்த்தப்படும்போது அவற்றில், உத்தேசமாக 395 ஊராட்சிகள் சேர்க்கப்படுகின்றன. இதில் பகுதியாக சேர்க்கப்படுவது, 78 ஊராட்சிகள்தான். பகுதி என்பது ஒரு bit. அவ்வளவுதான். நான் ஒரே ஒரு கருத்தை சொல்லிவிடுகிறேன்.

தமிழ்நாட்டில், 1994ல் 5 ஆண்டுகளுக்கொருமுறை ஒரு முறை உள்ளாட்சித் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் 1994 ஆம் ஆண்டில் உங்கள் ஆட்சியில், நீங்கள் தேர்தல் நடத்தவில்லை, 1996 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வந்துதான், வெற்றிகரமாக அந்த தேர்தலை நடத்திக் முடித்துக் காண்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஒன்றும் நடத்தப்படவில்லை. 2011 ஆம் ஆண்டிற்கு பிறகு, நீங்கள் 11 முறை தனி அலுவலர்கள் காலத்தை நீட்டித்திருக்கிறீர்கள். தேர்தல் நடத்துவதற்கு பயந்து, 11 முறை தனி அலுவலர்கள் காலத்தை நீட்டித்த ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி என்பதை இந்த அவையில் பதிவிட விரும்புகிறேன். (மேவையைத் தட்டும் ஒலி)

ஆனால், நல்ல காரணங்களுக்காக, நீண்ட நெடுங்காலமாக 2011 மக்களவை அடிப்படையாக வைத்து அவசியமான நகராட்சி, அவசியமான மாநகராட்சி, சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் இருக்கக்கூடிய ஊராட்சிகள், தாம்பரம் மாநகராட்சிக்கு அருகில் இருக்கக்கூடிய ஊராட்சிகள் இவற்றிலெல்லாம் மக்கள்தொகை விரிவடைகிறது. ஒரு ஊராட்சி பேரூராட்சியாகவும், ஒரு பேரூராட்சி நகராட்சியாகவும், ஒரு நகராட்சி மாநகராட்சியாகவும் மாறும்போது அங்கு மக்கள்தொகையும் அதிகரிக்கிறது.

மக்கள்தொகை எல்லை, மக்கள்தொகை விரிவடைகின்றபோது அங்கு மறுசீரமைப்பு கண்டிப்பாக வேண்டும். அப்படி மறுசீரமைப்பு அமைக்கின்றபோது வார்டு வரையறைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதைத்தான் உயர் நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இதில் அடிப்படை ஒன்றும் இல்லை. ஆனால், ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். தேர்தல் எப்போது வந்தாலும் அதை சந்திக்கக்கூடிய ஒரு முதலமைச்சராக இந்தியத் திருநாட்டிலே எங்களுடைய தளபதியார்தான் இருப்பார். தேர்தலுக்காக அஞ்சமாட்டார். 10 முறை தேர்தலில் வெற்றிபெற்று தமிழக அரசினுடைய வரலாற்றில் முத்திரைப் பதித்தவர் எங்களுடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தலுக்காக நாங்கள் பயப்பட மாட்டோம். நேற்று தேர்தலை அறிவித்தார்கள். எங்களுக்கு ஒதுக்கீடு கிடைத்தது. உடனே இரவுக்குள் வேட்பாளரை அறிவித்தார்கள். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அதனுடைய தலைவர் தளபதியார் அவர்கள். எனவே, சொல்கிறேன். எப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களாட்சித் தத்துவத்தில் நம்பிக்கையுள்ள இயக்கம். மறுசீரமைப்பு பணிகள் முடிந்தவுடன் தேர்தல் நடத்தத் தயாராக இருக்கிறோம். இப்போது உயர் நீதி மன்றம்கூட தீர்ப்பு வழங்கியிருக்கிறது. மறுவரையறை முக்கியம், எல்லை முக்கியம், மறுசீரமைப்பு முக்கியம், வார்டு வரையறைகள் முக்கியமாக இருக்க வேண்டும். அதேபோல நமக்கு இருக்கக்கூடிய இடஒதுக்கீடு, reservation கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். பழங்குடியினர், பட்டியலின மக்களுக்கான இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும். இந்த உண்மையான, உன்னதமான காரணத்திற்காகத்தான் இந்த அடிப்படைச் சட்டத்தில் எதுவும் இல்லை. எப்பொழுதும் இந்த அரசு தேர்தல் நடத்தத் தயாராக இருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டத்தை, தனி அலுவலர் நியமனச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஐ. பெரியசாமி கூறினார்.



நெல்லை மத்திய,மாநகர தி.மு.க சார்பில் பாளையங்கோட்டை சித்த மருத்துவமனை கல்லூரி எதிரில் உள்ள திடலில் தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (துச்சை) அன்டன் செல்லதுரை (பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல் கையும்,பாளை தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார்,நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,வட்ட செயலாளர் பேபி கோபால் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மைக்கேல் ராஜேஷ் வில்சன் மணித்துரை,அலிஃப் மீரான்,வேங்கை வெங்கடேஷ், ஸ்டார் முருகன்,நாதன்,அருள் இளங்கோ,கதிரேசன்,சித்திக், ஆவின் கல்யாணி,கேபிள் குமரேசன்,கிங் பாலா,பத்மராஜ் சடாமுனி,சார்லஸ்,செந்தில் குமார்,பெப்சி சரவணன், வின்சென்ட் வினோத்,பத்மா, சௌந்தரம் முத்துராஜ்,மேரி, பிந்து,ஜோஸ்வனிதா, கிருஷ்ணவேணி,சுப்புலட்சுமி, ஷெர்லி, உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### புதிய ஓய்வூதியத் திட்டம்: புதிய குழுவினை அமைத்து

# குழுவினுடைய வழிகாட்டுதலின்படி ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்த உரிய நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

சென்னை, ஜன.13 - ஒன்றிய அரசின் புதிய ஓய்வூதியத் திட்டமானது அரசுப் பணியாளர்கள் குறைந்தபட்ச ஓய்வூதியத்தைப் பெறுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடிய ஒரு திட்டம். நம்முடைய மாநிலத்தில் தக்கதொரு ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஒரு குழுவினை முதலமைச்சரோடு கலந்தாலோசித்து அமைத்து அந்தக் குழுவினுடைய வழிகாட்டுதல்படி ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.



சட்டப்பேரவையில் சி.வி.எம்.பி. எழிலரசன் கவன ஈர்ப்பில் ஓய்வூதியம் பற்றி பேசினார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்ததாவது:

ஒன்றிய அரசு, பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்டம் இரண்டிற்கும் மாற்றாக புதிதாக ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை இப்போது அறிவித்திருக்கிறார்கள்.

இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டமானது அரசுப் பணியாளர்கள் குறைந்தபட்ச ஓய்வூதியத்தைப் பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடிய ஒரு திட்டம். இருந்தாலும்கூட இந்தத் திட்டத்தினுடைய செயலாக்கத்திற்கு உரிய வழிகாட்டுதல்கள், விரிவான செயல்முறைகளை இன்னும் ஒன்றிய அரசு அதிலே வெளியிடவில்லை.

மிக விரைவில் அந்த வழிகாட்டுதல்கள், நெறிமுறைகள் வெளியிடப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். அது வெளியானவுடனேயே நம்முடைய மாநிலத்தில் தக்கதொறு ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஒரு புதிய குழுவினை முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, அந்தக் குழுவினை அமைத்து, அந்தக் குழுவினுடைய வழிகாட்டுதலின்படி நம்முடைய மாநிலத்தில் அந்த ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

### 'டங்ஸ்டன்' பிரச்சினையில் அரசின் நடவடிக்கை - மக்கள் ஏற்பு:

# போராடியவர்களின் மீது போடப்பட்ட வழக்கை ரத்து செய்த முதல்வருக்கு நன்றி!

## பேரவையில் அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மக்கள் சார்பில் நன்றி!

சென்னை, ஜன. 12 - டங்ஸ்டன் பிரச்சினையில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்கு ரத்து செய்யப்படும் என்று அறிவித்த முதல்வருக்கு மதுரை மக்கள் சார்பில் நன்றி என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி. மூர்த்தி தெரிவித்துள்ளார்.



இது குறித்து பேரவையில் அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது :-

இந்த டங்ஸ்டன் சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் எந்தளவிற்கு அந்த மக்களைப் பாதுகாக்கக்கூடிய அளவிலே, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; ஒட்டுமொத்தமான தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற விளக்கத்தை அந்தப் பகுதியிலே அரிட்டாப்பட்டியாக இருந்தாலும், வள்ளாளப்பட்டியாக இருந்தாலும், நரசிங்கம்பட்டி, அதைப்போல, கடாரிப்பட்டி, தெற்குத்தெரு மக்களிடத்திலே நேரடியாக அந்த மக்களைச் சந்தித்து, முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கக்கூடிய அந்தச் செயல்பாடுகளையெல்லாம் சொல்கிறபோது அந்த மக்கள் இன்றைக்கு அதை மனதார ஏற்றுக்கொண்டு, நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதேநேரத்தில், அவர்கள் போராடியிருக்கிறபோது, போட்ட வழக்கை முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, இரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மக்களுடைய கோரிக்கையையும் ஏற்று, மதுரை மாவட்ட மக்களுடைய சார்பிலும், அந்த மக்களின் சார்பிலும் அந்த வழக்கை இரத்து செய்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, நன்றி.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமல்

# பொங்கல் தினத்தில் நெட் தேர்வு!

## தேசிய தேர்வு முகமை அடாவடி!

சென்னை, ஜன. 13 - தேசிய தேர்வு முகமையினால் யுஜிசி நெட் தேர்வு, கலை மற்றும் அறிவியல் என 85 பாடங்களுக்கு நடத்தப்படுகிறது. கல்லூரி உதவி பேராசிரியர், ஜேஆர்ஃப் மற்றும் பிஎச்.டி சேர்க்கை ஆகியவற்றுக்கான தகுதி தேர்வாக ஆண்டிற்கு இரண்டு முறை இத்தேர்வு நடத்தப்படுகிறது. இதற்கான தேர்வுகள் ஜனவரி 3ம் தேதி தொடங்கி ஜனவரி 16 ம் தேதி வரை தேர்வு நடைபெறும் என அறிவிக்கப் பட்டது.

இந்நிலையில், தமிழர்களின் முக்கிய பண்டிகையான பொங்கல் பண்டிகை 14ஆம் தேதி முதல்16ஆம் தேதி வரை கொண்டாடப் படவுள்ளது. அதில் ஜனவரி 15 ஜனவரி 16 தேதிகளில் பல்வேறு பாடங்களுக்கு தேர்வு நடைபெறவுள்ளது. பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் தமிழர்களின் சிறப்பு பண்டிகை ஆகும். தமிழ்நாட்டில் இந்த நாட்கள் விடுமுறை தினங்களாக உள்ளது.

பொங்கல் பண்டிகையில் நெட் தேர்வு நடைபெறுவது மாணவர்களை பாதிக்கும் என தேதியை மாற்றிடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் எழுதி இருந்தார். இந்நிலையில், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பொருட்படுத்தாமல், ஜனவரி 15 மற்றும் 16 பொங்கல் தினத்தில் நடைபெறவிருக்கும் நெட் தேர்வுகளுக்கான ஹால்டிக்கெட் எனப்படும் நுழைவு அட்டையை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.



குன்னூர் சட்ட மன்றத் தொகுதி "கலைஞர் நூலகத்திற்கு " நீலகிரி மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் திராவிட வரலாற்று புத்தகங்ளை மாநில இலக்கிய அணி துணை செயலாளர் அ.திராவிடமணி வழங்கினார். உடன் மாவட்ட. தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளர் வெங்கடேஷ், நகர செயலாளர் இராமசாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பத்மநாபன், நகர பொருளாளர் ஜெகநாத் ராவ் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.